**கவனிக்க.**-*2023.06.30 ஆந் திகதிய 2339 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) (தமிழ்மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2340 - 2023 ජූලි මස 07 වැනි සිකුරාදා - 2023.07.07

*2340 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 07ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1184 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1185 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1188 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 1189 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் (திருத்தம்) சட்டமூலம் 2023, யூன் மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, யூலை மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூலை மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1183 - B 082471 - 5,403 (2023/07)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- திருகோணமலை

வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை - 2023.07.23.

திருகோணமலை நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான கீழ் குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2023.07.23 ஆந் திகதியன்று காலை 10.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ( ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தல் வேண்டும்.

2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏல விற்பனையிலிருந்து குறித்த பொருட்களை மீளப் பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

4. வழக்குச் சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினை செலுத்தி அதனை நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குபவர்கள் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

இ. பயஸ் றெஸ்ஸாக்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை,
2023, யூன் 21.

**சான்றுப் பொருட்களின் விபரம்- துவிச்சக்கர வண்டி**

| தொ. இல. | வழக்கு இல. | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | AR/ 2119/22 | 1 |
| 2. | AR/ 2119/22 | 1 |
| 3. | AR/ 2119/22 | 1 |
| 4. | AR/ 2119/22 | 1 |
| 5. | AR/ 2119/22 | 1 |
| 6. | AR/ 2119/22 | 1 |
| 7. | AR/ 2119/22 | 1 |
| 8. | AR/ 2119/22 | 1 |
| 9. | AR/ 2119/22 | 1 |
| 10. | AR/ 2119/22 | 1 |
| 11. | AR/ 2119/22 | 1 |
| 12. | AR/ 2119/22 | 1 |
| 13. | AR/ 2119/22 | 1 |
| 14. | AR/ 2119/22 | 1 |
| 15. | AR/ 2119/22 | 1 |
| 16. | AR/ 2119/22 | 1 |
| 17. | AR/ 2119/22 | 1 |
| 18. | AR/ 2119/22 | 1 |
| 19. | AR/ 2119/22 | 1 |
| 20. | AR/ 2119/22 | 1 |

| தொ. இல. | வழக்கு இல. | எண்ணிக்கை |
|---|---|---|
| 21. | AR/ 2127/22 | 1 |
| 22. | AR/ 2129/22 | 1 |
| 23. | AR/ 2127/22 | 1 |
| 24. | AR/ 2123/22 | 1 |
| 25. | AR/ 2128/22 | 1 |
| 26. | AR/ 2124/22 | 1 |
| 27. | AR/ 2121/22 | 1 |
| 28. | AR/ 2122/22 | 1 |
| 29. | AR/ 2125/22 | 1 |
| 30. | AR/ 489/22 | 1 |
| 31. | AR/ 132/23 | 1 |
| 32. | AR/ 2143/22 | 1 |
| 33. | AR/ 132/22 | 1 |
| 34. | AR/ 1742/22 | 1 |
| 35. | AR/ 470/20 | 1 |
| 36. | AR/ 248/22 | 1 |
| 37. | AR/ 1470/22 | 1 |
| 38. | இனங்காணப்படவில்லை | 1 |
| 39. | இனங்காணப்படவில்லை | 1 |
| 40. | இனங்காணப்படவில்லை | 1 |

| தொ. இல. | வழக்கு இல. | எண்ணிக்கை |
|---|---|---|
| 41. | இனங்காணப்படவில்லை | 1 |
| 42. | இனங்காணப்படவில்லை | 1 |
| 43. | இனங்காணப்படவில்லை | 1 |
| 44. | இனங்காணப்படவில்லை | 1 |
| 45. | இனங்காணப்படவில்லை | 1 |
| 46. | இனங்காணப்படவில்லை | 1 |
| 47. | இனங்காணப்படவில்லை | 1 |
| 48. | இனங்காணப்படவில்லை | 1 |
| 49. | இனங்காணப்படவில்லை | 1 |
| 50. | இனங்காணப்படவில்லை | 1 |

**சான்றுப் பொருட்களின் விபரம்- இரும்புத் துண்டுகள்**

| தொ. இல. | வழக்கு இல. | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இனங்காணப்படவில்லை | 1 |
| 2. | இனங்காணப்படவில்லை | 1 |
| 3. | இனங்காணப்படவில்லை | 1 |

**சான்றுப் பொருட்களின் விபரம்- மீன்பிடி வலை**

| தொ. இல. | வழக்கு இல. | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இனங்காணப்படவில்லை | 1 |
| 2. | இனங்காணப்படவில்லை | 1 |
| 3. | இனங்காணப்படவில்லை | 1 |

**சான்றுப் பொருட்களின் விபரம்- மீன்பிடிஉபகரணங்கள்**

| தொ. இல. | வழக்கு இல. | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | AR/ 905/22 | 1 |
| 2. | AR/ 905/23 | 1 |
| 3. | AR/ 905/24 | 1 |

**சான்றுப் பொருட்களின் விபரம்- மீன்பிடி படகு**

| தொ. இல. | வழக்கு இல. | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இனங்காணப்படவில்லை | 1 |
| 2. | இனங்காணப்படவில்லை | 1 |
| 3. | இனங்காணப்படவில்லை | 1 |
| 4. | இனங்காணப்படவில்லை | 1 |
| 5. | இனங்காணப்படவில்லை | 1 |
| 6. | இனங்காணப்படவில்லை | 1 |
| 7. | இனங்காணப்படவில்லை | 1 |
| 8. | இனங்காணப்படவில்லை | 1 |
| 9. | இனங்காணப்படவில்லை | 1 |
| 10. | இனங்காணப்படவில்லை | 1 |
| 11. | இனங்காணப்படவில்லை | 1 |
| 12. | இனங்காணப்படவில்லை | 1 |
| 13. | MC/2150/18 | 1 |
| 14. | MC/2132/FS/18 | 1 |
| 15. | PR/149/20 | 1 |
| 16. | இனங்காணப்படவில்லை | 1 |
| 17. | இனங்காணப்படவில்லை | 1 |
| 18. | இனங்காணப்படவில்லை | |

07-13

## ஆய விற்பனையும் குத்தகையும்

**அம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் கள்ளுத் தவறணை குத்தகை - 2024**

அம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் முதலாம் இலக்க கள்ளுத் தவறணையில் 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் திகதி தொடக்கம் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை சில்லறையாக கள்ளு விற்கும் உரிமை வழங்குவதற்கு நடைமுறையில் இருந்து வரும் விதிகளுக்கு அமையவும் 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகைக்கு அமையவும் கேள்விகள் கோரப்படுகின்றன.

02. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக 5,000 ரூபாவை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

03. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தமது சொந்தப் பெயரில் இருக்க வேண்டும். முகவர்கள் அல்லது இலங்கைப் பிரசைகள் அல்லாதவர்களின் மூலமாகவோ அல்லது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத் தவறணை குத்தகை சட்டங்களுக்கு அமைய அருகதையற்றவர்களின் கேள்விப்பத்திரம் அனுமதிக்கப்பட மாட்டாது.

04. ஒருவர் ஒரு கேள்விப்பத்திரத்தையோஅதிகமாகவோ அல்லது 5 பேர் சேர்ந்தோ அத்தவறணைக்கான கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படலாகாது.

05. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் "அம்பாந்தோட்டை 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம் - 2024" என தபால் உறையின் மேல் மூலையில் எழுதப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் சேர்க்கப்பட்டோ அல்லது தபாலிலோ 2023.08.14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பாக அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் கோருபவர்கள் அவைகள் மூடப்படும் நேரத்தில் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

06. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் யார் என்பதை அறிந்ததும் அவர் ஒப்பந்த விற்பனை விதிகள் அடங்கிய கேள்விப்பத்திரத்தில் கைச்சாத்திட்டு அம்பாந்தோட்டை பிரதேச செயலாளரினால் குறிக்கப்படும் பணத்தைப் பிணைப்பணமாக கட்ட வேண்டும்.

07. ஒரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ ஏற்கவோ அல்லது மறுக்கவோ அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு உரிமை உண்டு.

08. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி 2023.08.14 ஆனது மாற்றப்பட்டால், மறுபடியும் கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி 2023.09.11 எனக் கருதப்படல் வேண்டும்.

09. மேலதிக விபரங்களுக்கு அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அவர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

கௌசல்யா கலப்பத்தி,
பிரதேச செயலாளர்,
அம்பாந்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
2023, யூன் 07.

**அட்டவணை**

2024 ஆம் ஆண்டுக்கான அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை

| கள்ளுத் தவறணை | பிரிவு | எல்லை | கேள்விப் பத்திரம் முடியும் திகதி | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை | 2023.08.14 | மு.ப. 10.00 | பி. ப. 2.00 |
| | | | மு. ப. 10.00 | பி.ப. 5.00 | பி.ப. 9.00 |

07 - 09

---

## பதுளை பிரதேச செயலாளர் பிரிவின் 2024 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை

2024, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2024, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2023.08.09 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் 5000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்திசெய்து இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் படிவத்தின் கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரத்தின் பெறுமதியில் 25% இற்கு மேற்பட்ட வருமானச் சான்றுப்பத்திரத்துடன் முகவரிடப்பட்ட முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் தங்களால் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தினையும் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்த தவறணைக்காவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால்

மூலமாகவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களைப் பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2023.08.09ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்தப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2023.09.06ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

7. ஒருவர் சுய உரித்தினைப் பெற்றுக் கொண்டாரென பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக அவர் பதுளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாதக் கட்டணத்திற்கு கூடுதலான தொகையை என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சுபாஷ் நாணயக்கார,
பிரதேச செயலாளர்,
(பதில் கடமை),
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2023, யூன் 12.

**அட்டவணை**

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணைதொடர்பான விபரம் - 2024**
(2024.01.01 ஆந் திகதி தொடக்கம் 2024.12.31 ஆந் திகதிவரை)

| கள்ளுத் தவறணையின் பெயர் மற்றும் முகவரி | பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கப்படும் நேரம் | கள்ளுத் தவறணை மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|
| பதுளை இலக்கம் 01 கள்ளுத் தவறணை | பதுளை | பதுளை மாநகர சபை இல. 6 ஆம் பிரிவின் ஹாஓனுகொடுவ எனும் அரச காணி | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூ. 5,000 | 2023.08.09 ஆந் திகதி மு. ப. 10.30 |

**மீண்டும் விற்பனை செய்யப்படும் திகதியும் நேரமும்:-** *சிறந்த கொள்வனவாளர் முன்வரவில்லையெனில் 2023.09.06 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.*

*07-73*

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

### சென்ட்ரல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அண்ட் ஃபினான்ஸ் லிமிட்டட்
### கம்பனியின் பதிவு இல.- PQ 858 PB

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்*

*கம்பனியின் பெயர்:* சென்ட்ரல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அண்ட் ஃபினான்ஸ் லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.181/1, A, தர்மபால மாவத்தை, கொழும்பு 07
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* CHC 91/2019/CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* Gerard Jeevananthan David
*முகவரி:* Liquidator, C/O SJMS Associates 3rd Floor, No.11, castle Lane, Colombo 4
*நியமனத் திகதி: 2023.06.09*

*07- 50/1*

---

## அறிவித்தல்

### சென்ட்ரல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அண்ட் ஃபினான்ஸ் லிமிட்டட்
### கம்பனியின் பதிவு இல.- PQ 858 PB

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்*

*கம்பனியின் பெயர்:* சென்ட்ரல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அண்ட் ஃபினான்ஸ் லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.181/1, A, தர்மபால மாவத்தை, கொழும்பு 07
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* CHC 91/2019/CO
*நீதிமன்ற கட்டளைத் திகதி: 2023.06.09*
*கோரிக்கை தாக்கல் செய்த திகதி: 2019.12.03*
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* Gerard Jeevananthan David
*முகவரி:* Liquidator, C/O SJMS Associates 3rd Floor, No.11, castle Lane, Colombo 4

*07- 50/2*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் படி, 2023.06.19 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் குறித்து இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகின்றது.*

*நிறுவனத்தின் பழைய பெயர்:* ஏ எச் இன்டர் நெஷனல் லங்கா ( பீவீடீ) எல்டீடி
*நிறுவனத்தின் பதிவு இலக்கம்:* PV 00226659
*நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி:* இலக்கம் 48, ரோஸ்மீட் பிளேஸ், கொழும்பு 7
*நிறுவனத்தின் புதிய பெயர்:* ஏ எச் ஐ லங்கா ( பீவீடீ) எல்டீடி

சென்ட்ரல் கோப்பரேட் அன்ட் கன்சல்டன்சி
சேர்விஸஸ் (பிறைவட்) லிமிடட்,

இல.48,
ரோஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு 07.

*07-19*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன்.*

*நிறுவனத்தின் முன்னாள் பெயர்:* காட்சு உயர் மேம்பட்ட மருத்துவ தொழில்நுட்ப பயிற்சி மையம் (பிரைவேட்) லிமிடெட்

*நிறுவனத்தின் இல.:* PV 66705

*பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி:* இல. 249/ 1, மாலம்பே வீதி, தலங்கம, வடக்கு கொஸ் வத்த, பத்தரமுல்ல

*நிறுவனத்தின் புதிய பெயர்:* KIU CAMPUS (PRIVATE) LIMITED

நிறுவனத்தின் செயலாளர்.

07-20

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன்.

*நிறுவனத்தின் முன்னாள் பெயர்:* ஈப்பர் இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிடெட்

*நிறுவனத்தின் இல.:* PV 00212051

*பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி:* இல. 274/ 3, தலங்கம வடக்கு, தலங்கம

*நிறுவனத்தின் புதிய பெயர்:* EIPER INTERNATIONAL (PRIVATE) LIMITED

நிறுவனத்தின் செயலாளர்.

07-21

---

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம்.

*கம்பனியின் முந்தைய பெயர்:* டார்கட் லெபோரேட்டரி- நிகம்பு (பிரைவட்) லிமிட்டட்

*நிறுவனத்தின் இல.:* PV 00245248

*முகவரி:* இல. 37/3, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு 7

*நிறுவனத்தின் புதிய பெயர்:* ஸ்மார்ட் லங்கா டயக்னொஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

செக்ரடேரியஸ் ( பிறைவட்) லிமிடட்.

PV 5958

07-25

---

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம்.

*நிறுவனத்தின் முந்தைய பெயர்:* திரசேன்ட் (பிரைவட்) லிமிட்டட்

*நிறுவனத்தின் இல.:* PV 00248176

*முகவரி:* இல. 07, அலெக்ஸாண்ட்ரா பிளேஸ், கொழும்பு 7

*நிறுவனத்தின் புதிய பெயர்:* லங்கா ஈ- மொபைல் சொலூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

செக்ரடேரியஸ் (பிறைவட்) லிமிடட்.

PV 5958

07-26

---

# ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எல் டீ லியனகே
கணக்கு இல.: 0056 5000 8024

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2022.05.26ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.01.07ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.01.16ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலானதொண்ணூற்றி ஒரு லட்சத்து எழுபத்தி மூவாயிரத்த எண்ணூற்று நாற்பத்தி ஆறு ரூபா நாற்பத்தி எட்டு சதம் (ரூ. 9,173,846.48) 2022, மே 04 ஆந் திகதியிடப்பட்டு அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி ஒன்பது லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து எழுநூற்று பதின் நான்கு ரூபா முப்பத்தி ஏழு சதம் (ரூ. 7,942,714.37) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு எட்டு வீதம் (8%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும்

கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட 2019, சனவரி 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 00362519614 ஐ ஏற்ற உரித்து உறுதி சான்றிதழின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை குத்தகை உரிமைகளுக்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.08.16 ஆந் திகதி பி.ப. 2.45 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளே நான்கு கிரவேட் கண்டி பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் உல்பத்த கும்புர இல. 273 கிராம அலுவலர் பிரிவின் தலபியன்னாவையில் அமைந்த "தலபியன்னாவ வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 320310 எனும் கெடஸ்த்தர் வரைபடத்தில் கட்டம் இல. 1 இல் காட்டப்பட்ட லொட் இல. 0082 என குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன: வடக்கு: பார்சல் 84, மற்றும் 72; கிழக்கு: பார்சல் 73; தெற்கு: பார்சல் 81 மற்றும் மேற்கு: பார்சல் 56, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் சைபர் ஆறு இரண்டு ஹெக்டேயர் (ஹெக்டயர் 0.0262) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 320310 எனும் கெடஸ்த்தர் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் உரித்து உறுதி இல. 00362519614 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பார்சல் 52 மற்றும் 56 எனும் வீதி ஒதுக்கத்தின் மீதும் ஊடாகவும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

07-02/1

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

டபிள்யூ. ஜீ.ஜீ. ஞானவர்தன.
கணக்கு இல.: 0167 5000 0669

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.02.23ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.05.26ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.05.24ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே ஆறு இலட்சத்து பதினேழாயிரத்து நூற்று பதின் மூன்று ரூபா இருபத்தி ஒன்பது சதம் (ரூபா 20,617,113.29) 2023, சனவரி 11 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே இருபத்தி எட்டு இலட்சத்து பத்தொன்பதினாயிரத்து நானூறு ரூபா (ரூபா12,819,400.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு எட்டு வீதம் (8%) மேலும் அறுபத்தி எட்டு இலட்சத்து எண்பத்தி மூவாயிரத்து முந்நூறு ரூபா (ரூபா 6,883,300.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு எட்டு வீதம் (8%) இத்துடன் வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2571, 397, 868 மற்றும் 3003 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.08.17 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

வட மத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், திம்புலாகல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் பீஹிட்டிவெவ கிராம அலுவலர் பிரிவின் (தொகுதி 405 அமைப்பு C) பீஹிட்டிவெவ கிராமத்தில் அமைந்த "பீஹிட்டிவெவயாய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எம். சந்ரரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, திசெம்பர் 17 ஆந் (மிகத் திருத்தமாக) திகதியிடப்பட்ட இல. 1627 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: F. C. P. Po. 405 இன் லொட் 158 (மிகத்திருத்தமாக) ; கிழக்கிற்கு: F. C. P. Po. 405 இன் லொட் 182 (வீதி) (மிகத்திருத்தமாக); தெற்கிற்கு : F. C. P. Po. 405 இன் லொட் 135 (வீதி) (மிகத்திருத்தமாக) மற்றும் மேற்கிற்கு : F. C. P. Po. 405 இன் லொட் 136 (மிகத்திருத்தமாக), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி எட்டு தசம் நான்கு சைபர் பேர்ச் (0ஏ.0றூ.28.40பே.) அல்லது 0.173 ஹெக்டேயர்ஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1627 எனும் வரைபடத்திற்கு அமைவாக பொலன்னறுவை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் LDO J 36/73 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் 1 கீழே காட்டப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

மேற்கூறப்பட்ட (தொகுதி 405 அமைப்பு C) பீஹிட்டிவெவ கிராமத்தில் அமைந்த "பீஹிட்டிவெவயாய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் F. C. P. Po. 405 (அநுபந்த இல. 01 இன் ஷீட் இல. 01) இன் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: லொட் 158 (மிகத்திருத்தமாக) ; கிழக்கிற்கு: லொட் 182 (மிகத் திருத்தமாக) ; தெற்கிற்கு : லொட் 135 (மிகத்திருத்தமாக) மற்றும் மேற்கிற்கு : லொட் 136 (மிகத்திருத்தமாக), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் ஒன்று ஏழு மூன்று ஹெக்டயார்கள் (0.173 ஹெக்டேயர்ஸ்) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. F.C.P. Po. 405 எனும் வரைபடத்திற்கு அமைவாக பொலன்னறுவை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் LDO J 36/73 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

07-02/2

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

நசருள்ளா நிப்ரத்
கணக்கு இல.: 0074 5000 7271

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.05.25ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.06.23ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.06.12ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே ஒரு இலட்சத்து இருபத்தோராயிரத்து ஐந்நூற்று நாற்பது ரூபா தொண்ணூ ற்றி எட்டு சதம் (ரூபா 20,121,540.98) 2022, ஏப்பிறல் 19ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பத்து ஒன்பது இலட்சத்து எழுபத்தாறாயிரத்து நூற்றி நாற்பத்தி மூன்று ரூபா நாற்பத்தேழு சதம் (ரூபா15,976,143.47) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினான்கு தசம் ஐந்து வீதம் (14.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2119 மற்றும் 3282 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.08.05 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், மெதகம்பத்து கோரலே, வெள்ளஸ்ஸபத்து, மெதகம பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் மெதகம, இல. 110D எனும் கிராம அலுவலர் பிரிவின் மெதகம கிராமத்தில் அமைந்த "அன்கனுவெ கும்புர ( ஒரு பகுதி) என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் P.W. நந்தசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, பெப்புருவரி 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 6251 MO எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: "அன்கனுவெகும்புர" M.M. சித்தி சபாயா உரிமம் கோரும் நிரந்தர கட்டிடத்தை பிரிக்கும் மதில்; கிழக்கு: "அன்கனுவெகும்புர" M.M. லாஃபீர் உரிமம் கோரும் இதே காணியின் ஒரு பகுதியான வயல் வெளி; தெற்கு: "அன்கனுவேகும்புர" M.M.S. மிஸ்ரியா உரிமம் கோரும் நிரந்தர கட்டிடத்தை பிரிக்கும் மதில் மற்றும் மேற்கு: பிரதான வீதி மற்றும் M.M. சித்தி சபாயா உரிமை கோரும் நிரந்தர கட்டிடத்தைப் பிரிக்கும் மதில், ஆகிய இவ் எல்லைக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: ஐந்து தசம் மூன்று ஏழு பேர்ச் (0ஏ.0றூ. 5.37பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6251MO எனும் வரைபடத்திற்கு அமைவாக மொணராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் D18/ 77 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 6251 MO எனும் கூறப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 பின்வரும் காணியின் மீள் அளவீடாகும்.

மேற்கூறப்பட்ட மெதகம கிராமத்தில் அமைந்த "அன்கனுவெகும்புர ( ஒரு பகுதி) " என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் H.M.S.

உனவட்டுன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992, செத்தெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 18 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: "அன்கனுவெகும்புர" M.M. சித்திசபாயா உரிமம்கோரும் நிரந்தர கட்டிடத்தை பிரிக்கும் மதில்; கிழக்கு: "அன்கனுவெகும்புர" M.M. லாஃபீர் உரிமம் கோரும் இதே காணியின் ஒரு பகுதியான வயல் வெளி; தெற்கு: "அன்கனுவெகும்புர" M.M.S. மிஸ்ரியா உரிமம் கோரும் நிரந்தர கட்டிடத்தை பிரிக்கும் மதில் மற்றும் மேற்கு: பிரதான வீதி மற்றும் M.M. சித்தி சபாயா உரிமை கோரும் நிரந்தர கட்டிடத்தைப் பிரிக்கும் மதில், ஆகிய இவ் எல்லைக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: ஐந்து தசம் மூன்று ஏழு பேர்ச் (0ஏ.0றூ. 5.37பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 18 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொணராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் D 14/73 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

07-48

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, திமிரிகடவல, நிசங்சலவில் அமைந்த திருவாளர்கள் சீமாசஹித்த ( ஜனதா) ஏக்காபத்த கொவி சமாகமவின் கடன் பொறுப்புகளுக்காக ராஜகிரிய, புத்கமுவ வீதி, இல. 33/3C இல் அமைந்த ஈடுவைத்த ஆதனம்.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.10.19ஆந் திகதிய 2094ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.10.04ஆந் திகதிய "தினமின" , "தினகரன்" மற்றும் "டெய்லிநியுஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டிய வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2023.08.09ஆந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாதை ஒதுக்கத்தின் மீதான வழியுரிமையையும் இக்காணி கொண்டுள்ளது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை பல்லேபற்றுவில் கடுவல பிரதேச செயலாளர் பிரிவில் கடுவல மாநகரசபை எல்லைகளுள் கொடுவேகொட கிராம அலுவலர் பிரிவு இல. 491 B இல் கொடுவேகொடயில் அமைந்ததும் வெலிகட வீதி, வரிமதிப்பு இல. 33/ C/ 3 ஐக் கொண்ட "தெல்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்ஹ தயாரித்த 2013.08.12 திகதியிட்ட வரைபட இல. 7005/ 9000 இல் விபரித்த துண்டு 2A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : வெலிகட வீதி வரிமதிப்பு இல. 33/C/5 ஐக் கொண்ட நிலமனையும்; கிழக்கு : 4.0 மீ. அகல பாதையும் (உத்தரவு பெற்ற நில அளவையாளர் சுதர்மன் ஸ்ரீபால தயாரித்த வரைபட இல. 1627 இல் துண்டு L) உம்; தெற்கு : 6.0 மீ. அகல பாதையும் (வரைபட இல. 1593 இல் துண்டு B2) உம்; மேற்கு : வெலிகட வீதி வரிமதிப்பு இல. 33/ C/ 2 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 7005/ 9000 இன்படி பதின்நான்கு பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 14.00பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட வரைபட இல. 7005/ 9000 இல் குறிப்பிட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு பின்வரும் காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்ட கொடுவேகொடயில் அமைந்த வெலிகடயிலிருந்து புத்கமுவ வரையான பாதைக்கருகில் அமைந்த கீல்ஸ் கிங்ஸ்கேட் வீடுகள், வரிமதிப்பு இல. 33/C/3 ஐக் கொண்டதும் "தெல்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த 1997.10.20 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1631 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு: உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த வரைபட இல. 1627 இல் துண்டு H உம் ; கிழக்கு : உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த வரைபட இல. 1627 இல் துண்டு L உம் (4மீ. அகல பாதைக்கான ஒதுக்கம்) ; தெற்கு: உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த வரைபட இல. 1593 இல் துண்டு B2 உம் (6மீ. அகல பாதை ஒதுக்கம்). மேற்கு : துண்டு 1 ஆம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1631 இன் படி பதினான்கு பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 14.00பே.) விஸ்தீரணமுடைய காணியும்

அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் B 304/03 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

மேற்குறிப்பிட்ட கொடுவேகொடயில் வெலிகடயிலிருந்து புத்கமுவ வரை பாதை நெடுகவும் அமைந்த "தெல்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த 1997.08.23 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1593 இல் விபரித்த துண்டு B2 (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டு B1 உம் ; கிழக்கு : துண்டுகள் B 1 மற்றும் B 3 உம். ; தெற்கு : வரைபட இல. 1592 இல் துண்டு A உம்; மேற்கு: வெலிகடயிலிருந்து புத்கமுவ வரை பாதையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1593 இன் படி பதினாறு தசம் எட்டு பேர்ச் (00ஏ. 00றூ 16.8பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் G 1215/237 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது,

மேற்குறிப்பிட்ட கொடுவேகொடயில் வெலிகடயிலிருந்து புத்கமுவ வரையான பாதைக்கு அருகில் அமைந்த "தெல்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த 1997.09.16 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1627 இல் விபரித்த துண்டு L என அடையாளமிட்ட (பாதைக்கான ஒதுக்கம்) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : துண்டு H உம் ; கிழக்கு : துண்டுகள் 1, J மற்றும் K உம் ; தெற்கு : உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த வரைபட இல. 1593 இல் துண்டு B2 உம்; மேற்கு : துண்டு G ஆம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1627 இன் படி நான்கு தசம் எட்டு பேர்ச் (00ஏ. 00றூ. 4.8பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப் பதிவகத்தில தொகுதி/பக்கம் G 1222/10 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது,

மேற்குறிப்பிட்ட கொடுவேகொடயில் வெலிகடயிலிருந்து புத்கமுவ வரையான பாதைக்கு அருகில் அமைந்த "தெல்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிறிபால தயாரித்த 1997.08.23 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1593 இல் விபரித்த துண்டு B3 என அடையாளமிட்ட (சாக்கடை ஒன்றுக்கான ஒதுக்கம்) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டுகள் B1 மற்றும் B2 உம் ; கிழக்கு : UDA இன் பொருபன ஆதனம் என அழைக்கும் வயலும் ; தெற்கு : வரைபட இல. 1592 இல் துண்டு A உம்; மேற்கு: துண்டு B2 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1593 இன்படி பூச்சியம் தசம் ஐந்து பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 0.5பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் G 1215/238 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பு: சபையின் தீர்மான அறிவித்தலை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய 2018.10.04 ஆந் திகதி வர்த்தமானியிலும் 2018.10.19 ஆந் திகதி நாளிதழ்களிலும் வெளியிட்ட பின்னர் M/S சீமாசகித்த (ஜனதா) ஏக்காபத்த கொவி சங்கம நிறுவனம் 2,025,000 ரூபாய் தொகையினை 2019.01.14ஆந் திகதி தொடக்கம் 2019.10.30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் அவ்வப்போதாக வைப்பிலிட்டதோடு மேற்படி தொகை அந் நிறுவனத்தின் நிலையிலுள்ள கடனின் முதல், வட்டி என்பவற்றின் பொருட்டு அறவிடப்பட்டது.

ஏல விலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனம் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் நிறுவன அறவிடல் பிரிவில் பார்வையிட முடியும்.

தொலைபேசி இல.: 0112386075, 01102203412.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ.கே. எஸ். என். குணவர்தன,
பிரதான முகாமையாளர்,
அறவிடல் - தொகுதி.

இலங்கை வங்கி,
அறவிடல் தொகுதி பிரிவு,
03 ஆவது தளம், இல. 1,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.
07-22

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

( காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

விற்பனை அறிவிப்பு

கடன் இலக்கம்: 101730000016 மற்றும் 101521000106
கடனாளியின் முழுப்பெயர்: பொது முகாமையாளர் , அரச அபிவிருத்தி மற்றும் நிர்மானக் கூட்டுத்தாபனம் ( SD& CC)

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2023.05.19 ஆந் திகதிய 2333ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2023.05.19 ஆந் திகதிய "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லிநியூஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை

கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதிபெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2023.07.26ஆந் திகதி பி.ப.3.30 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி, தலைமைக் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

2019.06.04 ஆந் திகதிய 2087 ஆம் இலக்கத்தைக் கொண்ட அடகுப் பத்திரத்தின்படி, ஆறு கோடி அறுபத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நூற்று அறுபத்து எட்டு ரூபா தொண்ணூற்று மூன்று சதம் (ரூபா 66,962,168.93) 2023.03.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1. முதலாவது கடன் தொகை 101730000016

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான மூன்று கோடி எழுபத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஆறு ரூபா இருபத்து நான்கு சதம் (ரூபா 37,937,696.24) மற்றும் 2023.03.31 ஆந் திகதி வரை நிலுவைக்கான வட்டியாக இரண்டு கோடி மூன்று இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து அறுநூற்று இருபத்து நான்கு ரூபா தொண்ணூற்று இரண்டு சதத்திற்கான (ரூபா20,361,624.92) வட்டியுடன் இதன்படி முழுத் தொகையான ஐந்து கோடி எண்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து முந் நூற்று இருபத்து ஒரு ரூபா பதினாறு சதத்தியையும் (ரூபா 58,299,321.16).

இரண்டாவது கடன் தொகை 101521000106

